இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 07-12-2023

பழனிசாமிக்கு யார் புரிய வைப்பது?

எப்போதும், சேலத்திலேயே பதுங்கி இருக்கும் பழனிசாமி இப்போது மெதுவாக வெளியில் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறார். புயல் வருவதற்கு முன்பே சேலத்தில் உட்கார்ந்து கொண்டு, 'சென்னை மிதக்கிறது' என்று புளுகிக் கொண்டு இருந்தவர் பழனிசாமி. ஐம்பதாண்டுகள் இல்லாத வகையில் 48 செ.மீட்டர் வரைக்கும் ஒரே நாளில் மழை பெய்ததால் சென்னையில் சில பகுதிகளில் இன்னமும் தண்ணீர் வடியாமல் உள்ளது. மூன்று மாதத்தில் பெய்ய வேண்டிய மழை மூன்று மணி நேரத்தில் பெய்தது என்று சொல்லத் தக்க வகையில் மழை பெய்துள்ளது.

ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான மழை வெள்ள வாய்க்கால் தடுப்புப் பணிகளை தி.மு.க. அரசு செய்து வருவதால்தான் இந்தளவாவது பாதிப்பு குறைவாக இருக்கிறது. பழனிசாமி ஆட்சிக் காலமாக இருந்தால் அவ்வளவு தான் மொத்த சென்னையும் மூழ்கி இருக்கும்.

2015 ஆம் ஆண்டு நுங்கம்பாக்கத்தில் 29.4 சென்டிமீட்டர் மழையும், மீனம்பாக்கத்தில் 34.5 சென்டிமீட்டர் மழையும் 24 மணி நேர கால அளவில் பதிவானது. ஆனால் இப்போது - கடந்த 4 ஆம் தேதியன்று பெருங்குடியில் மட்டும் 44 சென்டிமீட்டர் மழையும், மீனம்பாக்கத்தில் 43 சென்டிமீட்டர் மழையும் 36 மணி நேரத்தில் பதிவாகியுள்ளது. 2015 ஆம் ஆண்டை விட இப்போது பெய்த மழை மிக மிக அதிகம் ஆகும்.

2015-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 199 பேர் இறந்திருக்கிறார்கள். ஆனால், இன்று அதைவிட அதிகமான மழை பெய்திருக்கக்கூடிய நேரத்தில் 17 பேர் மட்டுமே இறந்திருக்கிறார்கள். இதுவும் ஏற்பட்டிருக்கக்கூடாது. 2015 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் மரணம் அதிகம் ஆனதற்கு என்ன காரணம் என்பதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளக்கி இருந்தார்கள். எத்தகைய செயற்கை வெள்ளத்தை அ.தி.மு.க. அரசு உருவாக்கியது என்பதைச் சொல்லி இருந்தார்கள். உடனே பழனிசாமிக்கு கோபம் பொத்துக் கொண்டு வருகிறது.

"நான் கிராமத்தில் இருந்து வந்திருக்கிறேன். செயற்கை, இயற்கை வெள்ளம் என்று நான் கேள்விப்பட்டதே கிடையாது" என்று சொல்லி இருக்கிறார் பழனிசாமி. கிராமத்தில் இருந்து வந்த இவர்தான் மூன்று வேளாண் சட்டங்களை கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்தவர். பச்சைத் துண்டு போட்டுக் கொண்டு பட்டவர்த்தனமாக பச்சைத் துரோகங்களைச் செய்தவர் என்பதை இந்த நாடு அறியும்.

"2015-ஆம் ஆண்டில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திட்டமிடப்படாமல், அடையாறு வரும்பொழுது, 1 இலட்சம் கன அடி அளவிற்கு பெருமளவு நீர் திடீரென திறந்து விடப்பட்டது. வெள்ளம் ஏற்பட்டதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அது ஒரு செயற்கை வெள்ளம். இது இயற்கையாக ஏற்பட்டிருக்கக்கூடிய வெள்ளம். அதையும், இதையும் புரிந்துகொள்ள வேண்டும்" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். இதில் என்ன தவறு கண்டார் பழனிசாமி?

அ.தி.மு.க. ஆட்சியின் கையாலாகாத தனத்தின் ஒரே ஒரு உதாரணம்... 02.12.2015 அன்று எந்தவித முன்னறிவிப்பும் இன்றி செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் சென்னையே மிதந்தது. 174 பேர் இறந்தார்கள், 2 ஆயிரத்து 711 கால்நடைகள் இறந்தன. ஒரு தனியார் மருத்துவமனையின் ஜெனரேட்டர் அறை, ஆக்ஸிஜன் சிலிண்டர் இருந்த அறைகளில் வெள்ள நீர் புகுந்ததால் 14 நோயாளிகள் இறந்தார்கள். சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் குடியிருப்புகளில் இருந்து வெளியேற வேண்டிய அவலத்தையும் அப்போது நாடு பார்த்தது. அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவையே அதிகாரிகளால் இரண்டு நாட்களாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை. சென்னை மிதந்ததற்குப் பிறகும் அ.தி.மு.க. அரசு செயல்படவில்லை. அதனால்தான் மக்களே தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள்.

2015 ஆம் ஆண்டு முதலமைச்சர் ஜெயலலிதாவும், அவரது அமைச்சரவையும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தது. அவர்கள் அனைவரையும் எழுப்பி தகவல் சொல்ல அதிகாரிகளால் முடியவில்லை. மழை, வெள்ளம் அதிகம் ஆகிறது என்று தெரிய வந்ததும் ஏரிகளில் தேங்கும் தண்ணீரை படிப்படியாகத் திறந்துவிட வேண்டும். அ.தி.மு.க. ஆட்சியில் படிப்படியாகத் திறக்கவில்லை. 'முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தகவல் சொல்லிவிட்டோம். அவரிடம் இருந்து தகவல் இல்லை' என்று அதிகாரிகள் காத்திருந்தார்கள். செம்பரம்பாக்கம் உடையப் போகிறது என்பதை உணர்ந்த பிறகு மொத்தத்தையும் திறந்து விட்டார்கள். ஊரே இதனால்தான் மிதந்தது. இதனைத்தான் செயற்கை வெள்ளம் என்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். பழனிசாமி, உண்மையில் கிராமத்தில் இருந்து வந்திருந்தால் அது புரிந்திருக்கும்.

இன்னொன்றையும் சொல்லி இருக்கிறார் பழனிசாமி. "4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வடிகால் பணிகள் கூட நான் முதலமைச்சராக இருந்தபோது ஆசிய வளர்ச்சி வங்கி மூலமாக நிதியைப் பெற்று அந்த பணி தொடங்கும் நேரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தி.மு.க. இந்த திட்டத்தைக் கொண்டு வரவில்லை. நான்தான் கொண்டு வந்தேன்" என்று சொல்லி இருக்கிறார். இவரது ஆட்சியில் கிழித்தது என்ன என்பதை அ.தி.மு.க. ஆட்சிக் காலக் கோப்புகளைப் பார்த்தாலே நன்கு தெரியும்.

இவரது ஆட்சியில் திட்டமிட்டதாக அறிவித்தார்கள். அறிவிப்பை செயல்படுத்துவதைப் போல பாசாங்கு செய்தார்கள். கணக்குக் காட்டினார்கள். 'ஸ்மார்ட் சிட்டி என்ற பெயரால் மொத்தமாக பணம் கொள்ளையடித்தார்கள். மழைநீர் வடிகால் பணிகள் நடக்கவே இல்லை. அ.தி.மு.க. ஆட்சியின் 2016-21 காலக்கட்டத்தில் சென்னையின் வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காக மட்டும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில் ரூ.7,744 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிவிப்புகள் வெளியானது. ஆனால் எதையும் ஒழுங்காகச் செய்யவில்லை.

★ 2016-17 நிதிநிலை அறிக்கையில் ரூ.445.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அ.தி.மு.க. ஆட்சியில் அறிவித்தார்கள்.

★ 2018-19 நிதி நிலை அறிக்கையில் 2,055.67 கோடி ரூபாய் என்றும், 1,243.15 கோடி ரூபாய் என்றும் அ.தி.மு.க. ஆட்சியில் அறிவித்தார்கள்.

★ 2020-21 நிதிநிலை அறிக்கையில் 3000 கோடி ரூபாய் என்று அ.தி.மு.க. ஆட்சியில் அறிவித்தார்கள். இவை எதையும் பழனிசாமி ஆட்சி செயல்படுத்தவில்லை. இதனை பழனிசாமி மறந்திருக்கலாம். மக்கள் மறக்க மாட்டார்கள். அரசாங்க, சட்டசபை ஆவணங்களில் அவை இருக்கிறது. யாராலும் மறக்க முடியாது.

ஒரே ஒரு நாள் சேலத்தில் இருந்து வந்து, மீடியாக்களிடம் வாய்க்கு வந்ததை உளறிவிட்டு ஓடும் பழனிசாமிக்கு இதெல்லாம் புரியுமா?

சென்னை விமான நிலையத்தில் 22 விமானங்கள் ரத்து!

சென்னை, டிச.7-

'மிக்ஜாம்' புயல் காரணமாக சென்னை உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் வரலாறு காணாத வகையில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக சென்னை விமான நிலையத்தில் 22 விமானங்கள் நேற்று ரத்து செய்யப்பட்டது. சென்னையில் இருந்து புறப்பட வேண்டிய 11 விமானங்களும், சென்னைக்கு வர வேண்டிய 11 விமானங்களும் ரத்து செய்யப்பட்டது. விமான பைலட்டுகள், பொறியாளர்கள் மற்றும் பயணிகள் இல்லாததால் 22 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகத்தில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் மீன்பிடி படகுகளை சென்னையில் பல்வேறு இடங்களுக்கு அனுப்பும் பணிகளை ஆய்வு செய்தார். மேலும் படகுகள் தேவைப்படும் இடங்களுக்கு அனுப்ப அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

துணை மின் நிலையங்களில் மழைநீர்! பொதுமக்களின் நலன் கருதி

மின் விநியோகம் படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது!

மின் விநியோக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிட அமைச்சர் தங்கம் தென்னரசு வேண்டுகோள்!

சென்னை, டிச.7-

துணை மின் நிலையங்களில் மழைநீர் தேங்கியுள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி எச்சரிக்கையுடன் மின் விநியோகம் வழங்கும் பணி படிப்படியாக நடைபெற்று வருகிறது, பொதுமக்கள் இந்த அசாதாரணமான சூழலை புரிந்து கொண்டு மின் விநியோக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளதாவது:-

04.12.2023 அன்று காலை 12 மணி நிலவரப்படி 112 மெகாவாட் ஆக இருந்த சென்னை நகரின் தேவை 05.12.2023 அன்று மாலை 7:30 மணி நிலவரப்படி 1,488 மெகாவாட் ஆக அதிகரித்துள்ளது. இன்று மதியம் 12 மணி நிலவரப்படி, சென்னை மாநகரத்தின் மையப்பகுதிகளில் மின் சாரம் முழுமையாக மீட்டெடுக்கப்பட்டு தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. சென்னையில் மொத்தமுள்ள 1,812 மின்னூட்டிகளில் (FEEDERS) 1,610 மின்னூட்டிகள் முழுமையாக சீரமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 202 மின்னூட்டிகளை (FEEDERS) சீரமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மேற்கு மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட அன்னை நகர், அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர், அரும்பாக்கம், ஆவடி, காமராஜ் நகர், கொரட்டூர், மேனாம்பேடு, நொளம்பூர், கள்ளிக்குப்பம், ஜெ.ஜெ. நகர், சாந்தி காலனி, அண்ணா நகர், சேத்துப்பட்டு, SAF Games village, ஸ்பார்ட்டன் நகர், கலெக்டர் நகர், குமரன் நகர், மூர்த்தி நகர், சர்ச் சாலை, அடையாளம்பட்டு, S & P பொன்னியம்மன் நகர், கோயம்பேடு மார்க்கெட், மதுரவாயல், முகப்பேர் கிழக்கு, புழல், ஆர்.வி. நகர், டி.ஐ. சைக்கிள், அண்ணா நகர் மேற்கு ஆகிய இடங்களின் ஒரு பகுதி, சென்னை மத்திய மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட அண்ணா சாலை, கிரிம்ஸ் ரோடு, நுங்கம்பாக்கம், ஸ்பென்சர் பிளாசா, பூக்கடை, சிந்தாதிரிப்பேட்டை, லஸ், இராயப்பேட்டை, மேற்கு மாம்பலம் மற்றும் தலைமைச் செயலகம் ஆகிய பகுதிகள், சென்னை வடக்கு மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட பேப்பர் மில்ஸ் ரோடு, கொருக்குப்பேட்டை, திருவெற்றியூர், CMBTT, ICF, இந்தியா பிஸ்டன், கீழ்பாக்கம், மணலி, நியூகொளத்தூர், பெரியார் நகர் ஆகிய இடங்களின் ஒரு சில பகுதிகள், சென்னை தெற்கு I மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட ஆழ்வார் திருநகர், கிண்டி, இராமாபுரம், இராமசாமி சாலை, செயின்ட் தாமஸ் மவுண்ட், வடபழனி, கெருகம்பாக்கம், போரூர் ஒரு பகுதி மற்றும் சென்னை தெற்கு II மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட பெசன்ட் நகர், அடையாறு, வேளச்சேரி, திருவான்மியூர், கொட்டிவாக்கம், கடப்பேரி ஆகியவற்றின் ஒரு சில பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

மழைநீர் சூழ்ந்துள்ள காரணத்தால், 230 கி.வோ. KITS பார்க் துணை மின் நிலையம், 110 கி.வோ. பெரும்பாக்கம் துணை மின் நிலையம், TNSCB மற்றும் மணலி துணை மின் நிலையங்களின் இயக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பட்டினப்பாக்கம், புளியந்தோப்பு, பின்னி மில், ஸ்பர் டேங்க் ரோடு, நேரு ஸ்டேடியம், தாமோதரன் தெரு, முத்தமிழ் நகர், கொளத்தூர் பாலாஜி நகர், சாத்தாங்காடு, மீஞ்சூர், கல் மண்டபம், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, பஞ்சட்டி, நாப்பாளையம், திருவெள்ளவாயல், சாந்தி காலனி, எம்.எம்.காலனி, மதுரவாயல் தெற்கு, போரூர் கார்டன், பெரும்பாக்கம், TNSCB, சிப்காட், சிருசேரி, முடிச்சூர், பள்ளிக்கரணை மற்றும் வேளச்சேரி ஆகிய இடங்களின் சில பகுதிகளில் மழைநீர் தேக்கம் மற்றும் ஈரப்பதம் நிலவி வரும் காரணமாக மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியத்திற்குட்பட்ட மின் இணைப்புகளை சீரமைப்பதற்கான சிறப்பு அலுவலராக திரு சுதர்சன், மேற்பார்வைப் பொறியாளர் / மின்கூட்டு ஆராய்வு மற்றும் தொலைத் தொடர்பு & அலைப்பேசி கோபுரங்களுக்கான மின்சாரத்தினை சீரமைப்பதற்கான சிறப்பு அலுவலராக திருமதி நிறைமதி, மேற்பார்வைப் பொறியாளர் / தகவல் தொழில் நுட்பம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

துணை மின் நிலையங்கள். மின்னூட்டிகள், மின் மாற்றிகள் மற்றும் பில்லர் பெட்டிகளில் தேங்கியுள்ள மழைநீர் மற்றும் ஈரப்பதம் காரணமாக பொதுமக்களின் நலன் கருதி எச்சரிக்கையுடன் மின் விநியோகம் வழங்கும் பணி படிப்படியாக நடைப்பெற்று வருகிறது. இந்த அசாதாரணமான சூழலில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை தவிர்க்க மின்சார வாரியம் முழுமூச்சுடன் பணியாற்றி வந்தாலும், மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு காரணங்களால் மின் விநியோகம் சீரமைப்பதில் ஏற்படும் தாமதத்திற்குரிய சூழலை புரிந்து கொண்டு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென்று நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கேட்டுக்கொண்டுள்ளார்.

நாகை மாவட்டத்தில்

மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

அமைச்சர் எஸ்.ரகுபதி ஆய்வு! என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை, டிச.7-

வங்கக் கடலில் ஏற்பட்ட புயல் காரணமாக நாகை மாவட்டத்தில் மழை பெய்து வரும் நிலையில் நாகை மாவட்டத்திற்கு தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழுவினர் 31 பேர் உபகரணங்களுடன் நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்தனர். இதையடுத்து நாகை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழுவினர் கன மழை, காற்று போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் சீரமைக்க பயன் படுத்தப்பட உள்ள உபகரணங்களையும், அதைத் தொடர்ந்து நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்பட்டுவரும் பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறையையும் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் பார்வையிட்டார். இதில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமானஎன்.கௌதமன், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ்சந்த் மீனா, நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம்வர்கிஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹர்ஷ்சிங், மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, மாவட்ட கூடுதல் ஆட்சியர் ரஞ்ஜீத்சிங், நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர் மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், நாகை மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.பால்ராஜ், நாகை நகர துணைச் செயலாளர் வெற்றிலைடைசிவா, தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.செல்வா, வட்டாட்சியர்கள் கார்த்திகேயன், ரமேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆய்வுக்குப் பின் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி செய்தியாளர்களுக் அளித்த பேட்டியில் கூறியதாவது.

நாகை மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை தற்போது வரை 829,55 மி.மீ. மழை பெய்துள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புயல், மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களை மீட்டு தங்க வைக்க ஏதுவாக நாகை மாவட்டத்தில் மண்டல அளவிலான குழுக்கள் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து வட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு பாதிக்கப்படும் மக்களை மீட்டு தற்காலிக பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்க ஏதுவாக 12 புயல் பாதுகாப்பு மையங்களும், 5 பல்நோக்கு பேரிடர் மையங்களும், 145 பள்ளி மற்றும் 22 கல்லூரிகள், 100 சமுதாயக் கூடங்கள், 73 திருமண மண்டபங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் நாகை மாவட்டத்தில் இயற்கை இடர்ப்பாடுகளால் பாதிக்கப்படும் மக்களை மீட்க மாவட்ட நிருவாகத்திற்கு துணையாக 5000 முதல்நிலை பொறுப்பாளர்களும், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை அபாய குறைப்பு முகமை சார்பில் ஆப்தமித்ரா திட்டத்தின் கீழ் 300 தன்னார்வலர்களுக்கான பேரிடர் கால பயிற்சி அளிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளனர். தாழ்வானப் பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்நடை பாதுகாக்கும் வகையில் 100 கால்நடை பெட்டிகள் மற்றும் மருத்துவப் பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரத்துறை சார்பில் மருந்து பொருட்கள் மற்றும் இதர வசதிகள் தயார்நிலையில் உள்ளது. தீயணைப்புத் துறை சார்பில் உபகரணங்கள் காவல்துறை உபகரணங்கள், நகராட்சி மற்றும் தீயணைப்புத்துறை சார்பில் உபகரணங்கள், காவல் துறை உபகரணங்கள், நகராட்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் கீழ் மீட்பு உபகரணங்கள் மற்றும் மின் பகிர்மான கழகம் சார்பில் 4500 மின் கம்பம், 100 மின் மாற்றிகள், 120 கி.மீ. மின் கம்பிகள் போன்ற மின்சாதன உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினால் சமீபத்தில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்கு உடனுக்குடன் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது பெய்துள்ள கன மழையின் காரணமாக மொத்தம் 1500 ஹெக்டேர் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது. நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு மையத்தில் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் 04365251992 எண் மற்றும் வாட்சப் எண் 8438669800 இயங்கி வருகிறது. இக்கட்டுப்பாட்டு மையத்தில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இயற்கை பேரிடர் காலங்களில் எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது. பொதுமக்கள் தங்கள் பகுதியில் ஆபத்தான நிலையில் உள்ள பழமையான மரங்கள், கட்டிடங்கள் இருந்தால் அதுகுறித்து தகவல்களை உடனுக்குடன் தெரிவித்திடவும், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

D.T.P. ஆப்பரேட்டர்கள் தேவை!

முரசொலி கணினிப் பிரிவில் இரவுப் பணிக்கு **"தமிழ் தட்டச்சு"** மற்றும் **"பக்க வடிவமைப்பு"** செய்வதற்கு, திறமை மற்றும் முன்னனுபவம் வாய்ந்த ஆண்கள் தேவை. தகுந்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
பொது மேலாளர்
"முரசொலி"
180, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை
சென்னை - 600 034